# 5 வாழ்வியல் சடங்குகள்

சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள் வாழ்வியல் சடங்குகளாகும். இச்சடங்குகள் மனித வாழ்க்கையை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழ வேண்டும் என்ற கருத்தில் மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படுகிறது. இச் சடங்குகள் யாவும் சமய குருவின் துணையுடன் இயற்றப்படும் சடங்குகளாகக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் மங்கல கருமங்கள், அமங்கல கருமங்கள் என இருவகைப்படும்.

மங்கல கருமங்கள் சுப கருமங்களென அழைக்கப்படும். அந்த வகையில் பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுதல், காதுகுத்துதல், சோறூட்டல், ஏடு தொடங்குதல் என்பன சுப கருமங்களுட் சிலவாகும். சைவர்களாகிய நாம் அவை பற்றி அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

## அ. பெயர் சூட்டுதல்

குழந்தை பிறந்து 31ஆம் நாள் துடக்குக் கழித்த பின் குழந்தைக்கு பெயர் சூட்டும்சடங்குஇடம்பெறும்.இது நாமகரணம் எனவும் அழைக்கப் படும்.பெயர் சூட்டல் சடங்கானது ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும். முதலில் இறைவனுக்கு வழிபாடு நடத்தப்படும். அதனை அடுத்து தாய்மாமன் அல்லது ஒரு பெரியவர் மடியில் குழந்தையை வைத்து தெரிந்தெடுத்த பெயரை குழந்தையின் வலது காதில் மூன்று முறை கூற தொடர்ந்து சூழ்ந்திருக்கும் பெரியோர்களும் குழந்தையின் பெயரை ஏற்றுச் சொல்ல வேண்டும்.



பெயர் மந்திரம் போன்றது. அதனைத் திரும்பத் திரும்ப சொல்லி அழைக்கும் போதும் அப்பிள்ளை பெயர் தரும் பொருளுக்கு ஏற்றவனாக

வாழ்வான். ஆதலால் பிள்ளைகளுக்கு உயர்ந்த உத்தமமான பெயரையே வைத்தல் வேண்டும். எமது சமயத்தில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி ஆசிர்வதித்தல் ஒரு சடங்காகும். நாம் அவற்றிற்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்.

## (ஆ) காது குத்தல்

குழந்தை பிறந்த ஆறாம், ஏழாம், எட்டாம் மாதங்களில் ஒன்றில் சுபவேளையில் காதுகுத்துதல் இடம் பெறும். இது கர்ண வேதனம் எனவும் அழைக்கப்படும். பிள்ளைக்கு ஏற்படக் கூடிய சில நோய்களின் நிவர்த்திக் காகவும், தமிழ்ப் பண்பாட்டைப் பேணு வதற்காகவும், அழகுக்காகவுமே காது குத்தல் சடங்கு நடாத்தப்படுகின்றது. தைப்பூச நாள் காது குத்துவதற்குச் சிறப்பான நாளாகும்.



## (இ) சோறூட்டல்

குழந்தை பிறந்த ஆறாவது மாதத்தில் வரும் சுப முகூர்த்தத்தில் சோறூட்டும் சடங்கு நடைபெறும். இச்சடங்கினை அன்னப் பிராசனம் எனவும் அழைப்பர்.

சோறூட்டல் சடங்கு ஆலயம், வீடு முதலான இடங்களில் நடைபெறும். அரிசி, சர்க்கரை, கற்கண்டு, நெய் ஆகியவை கொண்டு அமுது பொங்கி இறைவனுக்குப் படைத்து பூசையில் வைத்த பிரசாதத்தை தந்தை அல்லது தாய்மாமன் குழந்தைக்கு மூன்று முறை ஊட்ட வேண்டும். பின் தாயும் மற்றும் உறவினர்களும் ஊட்டி விடுவர். குழந்தை எக்காலத்தும் உணவுக்குக் குறைவில்லாமலும் சுகதேகியாக வாழவும் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தல் சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கமாகும்.



## (ஈ) ஏடு தொடக்குதல்

கல்வியைத் தொடங்குதல் என்பது இதன் பொருளாகும். ஏடு தொடங்கல் நிகழ்வு 'வித்தியாரம்பம்', 'அட்சர அப்பியாச ஆரம்பம்' என்ற

பெயர்களாலும் அழைக்கப்படும். முற்காலத்தில் ஓலையிலான ஏட்டில் எழுதியே கல்வியை முன்னோர் கற்றார்கள். அதனால் முதலில் கல்வியை ஆரம்பிக்கும் போது ஏடு தொடங்குதல் என்று சொல்வது வழக்கமாகி விட்டது. இந் நிகழ்வானது குழந்தைக்கு அறிவை ஊட்டும் சுப கருமமாக விளங்குகின்றது.

குழந்தைக்கு மூன்று அல்லது ஐந்து வயதானதும் விஜயதசமி அன்று அல்லது தைப்பூசத்தன்று குழந்தைக்கு ஏடு தொடக்கலாம். முதலில் கோயிலில் அல்லது வீட்டில் கும்பம் வைத்து, பூசை வழிபாடுகள் செய்து கல்வியில் சிறந்த ஆசானின் ஆசியுடன் ஏடு தொடங்குதலை மேற்கொள்ளலாம்.



ஏடு தொடங்குதலை ஆரம்பிக்கும் போது, குருவானவர் வேட்டி அணிந்து, விபூதி தரித்து, தலைப்பாகை கட்டிக் கொண்டு குழந்தையை மடியில் இருத்தி, ஏட்டைப் பிள்ளையின் கையிற் கொடுத்து, அகரமுதலான எழுத்துக்களை சொல்லிக் கொடுத்தல் வேண்டும். பின் தட்டத்தில் பரவப்பட்டுள்ள பச்சையரிசியில் பிள்ளையின் விரலைப் பிடித்து எழுதுவித்தலும் எமது சமய மரபாகக் காணப்படுகின்றது.

இவ் வித்தியாரம்பமானது கல்வியில் மேன்மையும், உண்மைப் பயனும் அடைய வேண்டும் என்பதற்காகவே சுபநாளில் ஏடு தொடங்குவதும் மரபாகும்.

## பயிற்சிகள்

1. வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது?
2. வாழ்வியல் சடங்குகள் மூன்றின் பெயர்களை எழுதுக?
3. காது குத்தும் சடங்கினை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
4. சோறூட்டும் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?

## செயற்பாடு

★ நீர் அறிந்த வேறு மங்கல சடங்குகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

★ சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புடைய சடங்குகள் வாழ்வியல் சடங்குகளாகும்.

★ வாழ்வியல் சடங்குகள், மங்கல சடங்குகள், அமங்கல சடங்குகள் என இருவகைப்படும்.

★ குழந்தைக்கு பெயர் சூட்டுதல், காது குத்தல், சோறூட்டல், ஏடு தொடங்குதல் என்பன சுப கருமங்களாகும்.